# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2021

## வளர் தமிழ் 11

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. 'த்' என்பது

அ) உயிரெழுத்து ☐ ஆ) மெய்யெழுத்து ☐

இ) உயிர்மெய்யெழுத்து ☐ ஈ) ஆய்தவெழுத்து ☐

2. 'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்' என்ற வாழ்த்துப்பாவைப் பாடியவர்

அ) இளங்கோவடிகள் ☐ ஆ) முடியரசன் ☐

இ) திருத்தக்கதேவர் ☐ ஈ) பாவேந்தர் ☐

3. இராவண காவியத்தை எழுதியவர்

அ) புலவர்குழந்தை ☐ ஆ) பாவேந்தர் ☐

இ) கபிலர் ☐ ஈ) ஔவையார் ☐

4. செயப்படுபொருள் குன்றா வினையடி

அ) செல் ☐ ஆ) அழு ☐

இ) குடி ☐ ஈ) சிரி ☐

5. காவேரிக்கு அணை கட்டிய சோழன்

அ) இராசராசன் ☐ ஆ) கரிகாலன் ☐

இ) இராசேந்திரன் ☐ ஈ) குலோத்துங்கன் ☐

6. யாழ் நூலகம் திறந்து வைக்கப்பட்ட ஆண்டு

அ) 1933 ☐ ஆ) 1923 ☐

இ) 1981 ☐ ஈ) 1959 ☐

7. நடந்தேன் என்பது

அ) முன்னிலைப்பன்மை ☐ ஆ) முன்னிலைஒருமை ☐
இ) தன்மைஒருமை ☐ ஈ) படர்க்கைஒருமை ☐

8. இராவணனின் தந்தை

அ) இந்திரசித்து ☐ ஆ) வீடணன் ☐
இ) கும்பகண்ணன் ☐ ஈ) வச்சிரவாவு ☐

9. உண்பித்தான் என்பது

அ) தன்வினை ☐ ஆ) பிறவினை ☐
இ) செய்வினை ☐ ஈ) செயப்பாட்டுவினை ☐

10. ங் ஞ் ண் ந் ம் ன்

அ) வல்லினம் ☐ ஆ) உயிரினம் ☐
இ) இடையினம் ☐ ஈ) மெல்லினம் ☐

11. முழு இலங்கையையும் சோழரது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தவன்

அ) இராசேந்திரசோழன் ☐ ஆ) இராசராசசோழன் ☐
இ) பராந்தகசோழன் ☐ ஈ) சுந்தரசோழன் ☐

12. மாதவியின் நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்ற நகரம்

அ) மதுரை ☐ ஆ) வஞ்சி ☐
இ) புகார் ☐ ஈ) காஞ்சி ☐

13. குழந்தைப்பருவத்திலேயே ஒருவரது எதிர்காலத்தை அறியலாம் என்பதை விளக்கும் பழமொழி

அ) காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு. ☐

ஆ) விளையும் பயிரை முளையில் தெரியும். ☐

இ) அக்கரைக்கு இக்கரை பச்சை. ☐

ஈ) ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுகிறது. ☐

14. "காய்கதிர்ச்செல்வனே! கள்வனோ என் கணவன்" எனக் கதறியவள்

அ) மாதவி ☐ ஆ) மாதரி ☐

இ) கண்ணகி ☐ ஈ) ஐயை ☐

15. தலைக்கு ஒரு பழங்கொடு. இதில் இடம்பெற்றுள்ள ஆகுபெயர்

அ) குணவாகுபெயர் ☐ ஆ) சினையாகுபெயர் ☐

இ) பொருளாகுபெயர் ☐ ஈ) இடவாகுபெயர் ☐

16. உருபு ஏற்காத வேற்றுமை

அ) 2ஆம் வேற்றுமை ☐ ஆ) 1ஆம் வேற்றுமை ☐

இ) 7ஆம் வேற்றுமை ☐ ஈ) 5ஆம் வேற்றுமை ☐

17. மாசாத்துவன் ____________ தந்தை

அ) கோவலனின் ☐ ஆ) மாதவியின் ☐

இ) கண்ணகியின் ☐ ஈ) மணிமேகலையின் ☐

18. "எண்ணிக்குழிவெட்டி, இடுப்பொடிஞ்சு நிக்கையிலே"எனும் பாடல்

அ) தாலாட்டு ☐ ஆ) தொழிற்பாட்டு ☐

இ) காதற்பாட்டு ☐ ஈ) ஒப்பாரி ☐

19. எழுதினான் என்ற சொல்லின் வினையடி

அ) எழும்பு ☐ ஆ) எழு ☐

இ) எழுது ☐ ஈ ) எழுதிய ☐

20. இரட்டைக்கிளவிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) காலங்காலமாக ☐ ஆ) பொலுபொலு ☐

இ) பச்சைப்பசேல் ☐ ஈ ) கல்விகேள்வி ☐

21. பூ + அரும்பு என்பதைச் சேர்த்தால்

அ) பூவரும்பு ☐ ஆ) பூஅரும்பு ☐

இ) பூவ்அரும்பு ☐ ஈ ) பூவ்வரும்பு ☐

22. விண்ணியல் எனும் சொல்லின் ஒத்தகருத்துள்ள சொல்

அ) வானியல் ☐ ஆ) பொறியியல் ☐

இ) பொருளியல் ☐ ஈ ) உயிரியல் ☐

23. உவமைத் தொடருக்கு எடுத்துக்காட்டு

அ) அத்தி பூத்தாற்போல ☐ ஆ) பிஞ்சில் பழுத்தல் ☐

இ) வாழையடிவாழையாக ☐ ஈ ) பவளவாய் ☐

24. கழகவிலக்கியங்கள் குறைந்த சொல்லாட்சியுடன் காணப்படுவதன் கரணியம்

அ) குறுகிய எழுத்து ☐ ஆ) ஏட்டெழுத்து ☐

இ) நீண்ட எழுத்து ☐ ஈ ) ஒற்றெழுத்து ☐

25. பண்புத்தொகையைக் குறிக்கும் சொல்

அ) அறுசுவை ☐ ஆ) தேன்மொழி ☐

இ) விளைபயிர் ☐ ஈ) கத்திகோடரி ☐

26. "ஓடிடும் தமிழா நில் நீ ஒரு கணம் மனதைத்தட்டு" எனப் பாடியவர்

அ) இரவி ☐ ஆ) அம்பி ☐

இ) சாலை இளந்திரையன் ☐ ஈ) உதயைவீரையன் ☐

27. காதற்பாடலில் சந்தன மரத்துக்கு ஒப்பிடப்படுபவர்

அ) தலைவன் ☐ ஆ) தலைவி ☐

இ) ஊர்ப்பெண்கள் ☐ ஈ) செவிலித்தாய் ☐

28. காவேரியைப் பெண்ணாக உருவகித்துப் பாடியவர்

அ) மாசாத்துவன் ☐ ஆ) கணிகன் ☐

இ) மாநாய்கன் ☐ ஈ) கோவலன் ☐

29. தமிழர் போற்றி வழிபடும் கல்

அ) சிற்பக்கல் ☐ ஆ) நடுகல் ☐

இ) வைரக்கல் ☐ ஈ) செங்கல் ☐

30. இடைக்குலப் பெண்கள்

அ) விறலியர் ☐ ஆ) ஆய்ச்சியர் ☐

இ) கூத்தர் ☐ ஈ) மறவர் ☐

புள்ளிகள் 30

2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஏறத்தாழ நானூற்றைம்பது ஆண்டுகள் மூன்று ஐரோப்பிய இனத்தவர்கள் இலங்கையை மாறிமாறி ஆண்டனர். முதலில் போர்த்துக்கேயர் வந்தனர். இவர்கள் நூற்றைம்பது ஆண்டுகாலம் ஆண்டனர். போர்த்துக்கேயர் மிகவும் கொடியவர்கள். மக்களைக் கடுமையாகக் கொடுமைப்படுத்தி அடக்கியும் ஒறுத்தும் ஆட்சி நடத்தினர். தங்கள் மதத்தைப் பரப்புவதற்காக புகழ் வாய்ந்த திருக்கோணேச்சுரத்தையும் இடித்தனர். வாழையிலையில் உணவு உண்ணக்கூடாது என்று சட்டம் இட்டனர். மீறி உணவு உண்டாலோ ஒறுத்தனர். இவ்வாறு கொடுங்கோன்மை செய்து கொண்டிருந்த போர்த்துக்கேயரைப் போரில் வென்று ஒல்லாந்தர் ஆட்சியைக் கைப்பற்றினர். ஒல்லாந்தர் போர்த்துக்கேயரைப் போன்று கடுமையாக நடந்து கொள்ளவில்லை. அவர்கள் மக்களுடன் மென்போக்கையே கடைப்பிடித்தனர். மதவெறியைக் கொண்டிராமல் இறைவழிபாட்டு உரிமையை வழங்கினர். அதனுடன் உரோமானிய ஒல்லாந்துச் சட்டங்களையும் இணைத்து ஒரு சட்ட வரையறையை உருவாக்கினர். அச்சட்டம் உரோமன்-டச்சுச் சட்டம் எனப்பட்டது. அறமன்றங்களை அமைத்து அறவாணர்களை நியமித்து நாட்டில் நல்லாட்சியை மேற்கொண்டனர். இதன்பின் ஆங்கிலேயர் ஒல்லாந்தரை வென்று ஆட்சியைக் கைப்பற்றினர். இவர்கள் ஒல்லாந்தரை விடவும் நல்லவர்களாக நடந்து கொண்டனர். இவர்கள்தான் தங்கள் ஆட்சி வசதிக்காக தமிழர் வாழும் பகுதியையும் சிங்களவர் வாழும் பகுதியையும் ஒன்றாக இணைத்தனர். இந்த இணைப்பே தமிழினத்தைச் சாகடிக்கும் தூக்குக் கயிறாயிற்று.

1. வாழையிலையில் உணவு உண்ணக்கூடாது என்று யார் சட்டம் இட்டனர்?

______________________________

______________________________

2. எத்தனை ஆண்டுகள் போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்டனர்?

______________________________

______________________________

3. போர்த்துக்கேயர் எதற்காக திருக்கோணேச்சுரத்தை இடித்தனர்?

______________________________

______________________________

4. உரோமானிய ஒல்லாந்துச் சட்டங்களையும் இணைத்து உருவாக்கப்பட்ட சட்டம் எது?

______________________________

______________________________

5. தமிழர் வாழும் பகுதியையும் சிங்களவர் வாழும் பகுதியையும் ஒன்றாக இணைத்தவர் யார்?

______________________________

______________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. குமரிக்கண்டத்தில் வளம் பெருக்கிய ஆறுகள் எவை?

___

___

2. யாழ்நூலகக் கட்டிடக்கலையை வடிவமைத்தவர் யார்?

___

___

3. குமரிக்கண்டம் எதனால் அழிவுற்றது?

___

4. கண்ணகி விண்ணுலகு அடைந்த நாடு எது?

___

5. “எம் தமிழர் மூதாதை; குன்றெடுத்த தோளான்” எனப் பாவேந்தர் யாரைப் புகழ்ந்து பாடியுள்ளார்?

___

___

6. மும்முடிச்சோழமண்டலம் என அழைக்கப்பட்ட நாடு எது?

___


7. புலம்பெயர் தமிழர் தமிழை விட்டுவிடாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அம்பி கூறுகிறார்?

___

___

புள்ளிகள் 10

4. பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.



உரிமையுடன் இருப்பதும் நட்பு
உண்மையாக இருப்பதும் நட்பு

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

குறிப்புவினை ____________________

அடுக்கிடுக்குத்தொடர் ____________________

செயப்படுபொருள் குன்றியவினை ____________________

2. தரப்பட்டுள்ள சொற்களின் தொகைகளை இனங்கண்டு எழுதுக.

கடிநாய் ____________________

இராப்பகல் ____________________

மலைத்தோள் ____________________

3. வினையடிகளை இறந்தகாலத்தில் பொருத்தமாக மாற்றி எழுதுக.

| | தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|---|
| தேடு | | | |
| பார் | | | |

4. வல்லின மெய்யெழுத்துகளின் இன எழுத்துகளைத் தருக.

க் ____________________ த் ____________________

ச் ____________________ ப் ____________________

ட் ____________________ ற் ____________________

5. பின்வரும் இணைமொழிகளின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

1. வாடிவதங்கி ____________________

2. அங்கும்இங்கும் ____________________

புள்ளிகள் 15

6) **பந்தியை வாசித்து, மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

குழந்தைத் தொழிலாளர் என்பது சிறுவர்களைத் தொழிலில் ஈடுபடுத்துவதைக் குறிக்கின்றது. பெரும்பாலான நாடுகளில் சட்டத்திற்கு மாறாகக் குழந்தைகள் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர். பன்னாட்டு நிறுவனங்களில் இக்கொடுமை இடம்பெறுகிறது. உலகில் ஏற்பட்டுள்ள கல்விமுறை மாற்றம், தொழில் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றம் என்பன குழந்தைகளின் உரிமை தொடர்பான எண்ணங்களை மாற்றியுள்ளது. பள்ளிப்பணி, வீட்டுப்பணி தவிர வேறு பணிகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தக்கூடாது என ஒன்றிய நாடுகள் அவையின் குழந்தைத் தொழிலாளர் சட்டம் கூறுகிறது. இன்று பரவலாகத் தொழிலாலைகள், சுரங்கங்கள், உணவுப்பொருள் விற்பனை, சுற்றுலா வழிகாட்டி, அங்காடிகளில் பொருட்களை அடுக்குதல், துப்பரவுப்பணி போன்றவற்றில் குழந்தைகள் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். உலகம் முழுவதும் ஐந்து முதல் பதினான்கு அகவை வரையான 158 மில்லியன் சிறுவர்கள் பணி செய்வதாக ஒன்றிய நாடுகள் அவை ஆய்வு கூறுகிறது.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ இராவணனது சிறப்பியல்புகளும் அவனது ஆட்சியும

- ✸ புலம்பெயர் தேசத்தில் தமிழ்க் கல்வி

- ✸ ஒற்றுமையின் வலிமை

புள்ளிகள் 20